Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate

Official Property Record



Digitally Verified Record - Powered by Verified RealEstate™

வளவனூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : திரு. த. அண்ணாதுரை B.E.,

ந.க.எண். 108 / 2024 / அ1 **நாள். 02.12.2024**

பொருள்: மனைப்பிரிவு அங்கீகாரம் – பேரூராட்சி நிர்வாகம் – விழுப்புரம் மாவட்டம் – வளவனூர் பேரூராட்சி – வளவனூர் வருவாய் கிராமம் -- சர்வே எண். 37/1,2, 38/1,2,3 மற்றும் 39/1பி ஆகியவற்றில் 4.74 ஏக்கர் புஞ்சை நிலத்தில் அமையப்பெற்ற புதிய மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு துறை மூலம் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது – மனைப்பிரிவு அங்கீகரித்து இறுதி ஒப்புதல் அளித்து இறுதி ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை : 1. விழுப்புரம் மண்டல நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடித எண். LQC6YF1B/2024/TCP, நாள். 10.05.2024 (சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது)

2. இவ்வலுவலக கடித ந.க.எண்.108/2024/அ1 நாள். 13.05.2024

3. வளவனூர் சார்பதிவாளர் அலுவலக சாலை மற்றும் பொது திறவியிட தான பத்திர பதிவு ஆவண எண். 1751/2024 நாள். 14.05.2024.

4. விழுப்புரம் மண்டல நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடித எண். LQC6YF1B/2024/TCP நாள். 17.05.2024 (தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டது)

5. இவ்வலுவலக கடித ந.க.எண்.108/2024/அ1 நாள். 20.05.2024

6. இவ்வலுவலக கடித குறிப்பு ந.க.எண்.108/2024/அ1 நாள். 09.09.2024

7. விழுப்புரம் மண்டல நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண். 2096/2024/வி.மா2 நாள். 03.10.2024.

8. திரு.ஆர். மோகன் மற்றும் ஆர். சுந்தர் என்பவர்கள் கேட்புத் தொகை செலுத்திய நாள். 15.10.2024.

9. விழுப்புரம் மண்டல நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் டித ந.க.எண். 2096/2024/வி.மா2 நாள். 25.11.2024.

10. வளவனூர் பேரூராட்சி மன்றத் தீர்மானம் எண். 292, நாள். 29.11.2024.

11. திரு. ஆர். மோகன், திரு.ஆர்.சுந்தர், நெ.4, தென்னந்தோப்பு தெரு, குமாரகுப்பம், வளவனூர் என்பவர்களின் விண்ணப்பம் நாள். 02.12.2024

12. தொடர்புடைய ஆவணங்கள்.

ஆணை:

விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் வட்டம், வளவனூர் தேர்வுநிலை பேரூராட்சி எல்லைக்குட்பட்ட வளவனூர் கிராம சர்வே எண. 37/1,2, 38/1,2,3 மற்றும் 39/1பி ஆகியவற்றில் 4.74 ஏக்கர் புஞ்சை நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய மனைப்பிரிவிற்கு சாலை அமைப்பு வரைபடம் இசைவு பார்வை (1)இல் காணும் விழுப்புரம் மாவட்ட நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர் அவர்களின் கடிதத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, பார்வை (2)இல் காணும் இவ்வலுவலக கடிதம் வாயிலாக ஒதுக்கீடு செய்யப்பட்ட சாலைகள், பூங்காக்கள் மற்றும் பொது திறவியிட ஒதுக்கீடு முதலியவற்றை இப்பேரூராட்சி வசம் தானமாக ஒப்படைப்பு செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து பார்வை (3)இல் காணும் வளவனூர் சார்பதிவாளர் அலுவலக 2024 வருடத்திய ஆவண எண். 1751/2024–ன்படி சாலைகள், பூங்காக்கள் மற்றும் பொது திறவிட ஒதுக்கீடுகள் தானமாக இப்பேரூராட்சி ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதனைத் தொடர்ந்து பார்வை (4)இல் காணும் விழுப்புரம் மாவட்ட நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர் அவர்களின் கடிதத்தின் வாயிலாக **ம.வ./ந.ஊ.உ.இ(வி.மா) எண். 109/2024** என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பார்வை (5)இல் காணும் இவ்வலுவலகக் கடிதம் வாயிலாக மேற்படி மனைப்பிரிவில் ஒப்படைக்கப்பட்ட சாலைகளுக்கு தார் சாலை அமைக்கவும் மற்றும் அடிப்படை வசதிகளான மழைநீர் வடிகால், தெருவிளக்குகள், குடிநீர் விநியோக பணிகள் செய்யக்கோரி கேட்டுக்கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து மனைப்பிரிவு உரிமையாளர்களால் அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு தனியார் பொறியியல் கல்லூரி வாயிலாக ஆய்வறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இப்பொருள் தொடர்பாக மேற்படி மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்க கேட்பு நிர்ணயம் செய்து பார்வை (6)இல் காணும் இவ்வலுவலகக் கடிதக்குறிப்பு வாயிலாக கேட்டுக்கொள்ளப்பட்டதனைத் தொடர்ந்து பார்வை (8)இல் காணும் மனைப்பிரிவின் உரிமையாளர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட கேட்புத் தொகை ஆன்லைன் வாயிலாக செலுத்தப்பட்டதனால் பார்வை (10) இல் காணும் இப்பேரூராட்சி மன்றத்தில் மேற்காணும் குடியிருப்பு மனைப்பிரிவினை அங்கீகரிக்க பொருள் சேர்க்கப்பட்டு நீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எனவே விழுப்புரம் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரின் மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டும், பார்வை (11) இல் காணும் விண்ணப்பத்தின்படியும் வளவனூர் கிராம சர்வே எண. 37/1,2, 38/1,2,3 மற்றும் 39/1பி ஆகியவற்றில் 4.74 ஏக்கர் புஞ்சை நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள 103 மனைகளுக்கும் மனைப்பிரிவு ஒப்புதல் அளித்து இறுதி ஆணையிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. பார்வை (3)இல் காணும் வளவனூர் சார் பதிவாளர் அலுவலக தான பத்திரத்தின்படி சாலைகள், பூங்காக்கள் மற்றும் பொது திறவியிட ஒதுக்கீடுகள் ஆகியவற்றிற்கு மனுதாரர்களால் எவ்வித உரிமையும் கொண்டாட இயலாது.

2. விழுப்புரம் மண்டல நகர்ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண். LQC6YF1B/2024/TCP நாள். 10.05.2024–ன்படி மனைப்பிரிவிற்கு **ம.வ./ந.ஊ.உ.இ(வி.மா) எண். 109/2024** என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள மனை

அளவுகள், புல எண்கள் மற்றும் உத்தேச சாலை அமைப்புகளில் மாற்றம் ஏதும் செய்தல் கூடாது.

3. பேரூராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகளில் எவ்வித ஆக்கிரமிப்பும் ஏற்படுத்தக்கூடாது. அவ்வாறு ஏதும் ஏற்படின் மனைப்பிரிவு உரிமையாளர்/ மனுதாரரே முழு பொறுப்பாவார்.

4. தங்களால் கொடுக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் இம்மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கப்படுகிறது. பின்னர் நில அளவையாளர் மூலம் அளவீடு செய்யும் போது குறைகள் ஏதும் இருந்தால், மனுதாரர் அதற்கு நிகரான இடம் அல்லது தொகை செலுத்த நேரிடும்.

5. இடம் தொடர்பாக பின்னர் ஏதேனும் நீதிமன்றத்தில் வழக்கோ / வில்லங்கமோ இருப்பது தெரியவந்தால், நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு கட்டுப்பட்டதாகும்.

6. இம்மனைப்பிரிவிற்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் செலுத்தப்படாமலோ மற்றும் அடிப்படை வசதிகள் ஏதேனும் செய்து கொடுக்க வேண்டி இருந்தாலோ, மனைப்பிரிவு உரிமையாளரே அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும்.

7. பார்வை (4)இல் காணும் விழுப்புரம் மண்டல நகர்ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதத்தில் பார்வையில் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்து அரசாணைகளில் உள்ள வழிமுறைகளையும் பின்பற்ற வேண்டும்.

8. மேலும் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்படும் ஒப்புதல் தொடர்பாக தணிக்கையின்போது குறைகள்/இழப்பீடுகள் ஏதேனும் கண்டறியப்பட்டால் தாங்களே செலுத்த வேண்டும்.

9. இம்மனைப்பிரிவு அங்கீகாரம் அரசால் அவ்வப்போது விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பொருந்தும்.

10. அடிப்படை வசதிகள் குறித்து இப்பேரூராட்சி வழங்கும் உத்தரவிற்கு கட்டுப்பட்டவராவர்.

செயல் அலுவலர்,
வளவனூர் தேர்வுநிலை பேரூராட்சி,
விழுப்புரம் மாவட்டம்.

பெறுநர் : திரு. ஆர். மோகன் மற்றும் ஆர்.சுந்தர், தென்னந்தோப்பு தெரு, குமாரகுப்பம், வளவனூர் அஞ்சல், விழுப்புரம் மாவட்டம்.

நகல் : 1. விழுப்புரம் மண்டல நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. சார்பதிவாளர், வளவனூர் அவர்களுக்கு தகவலுக்காக.
3. கோப்புக்கு

Our services go beyond

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.

Smarter Tools, Stronger Decisions

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate